# மனித வள மேலாண்மைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2024 – 2025

### மானியக் கோரிக்கை எண் – 35

**திரு. தங்கம் தென்னரசு**

**நிதி மற்றும் மனித வள**

**மேலாண்மைத் துறை அமைச்சர்.**

©

தமிழ்நாடு அரசு

2024

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 9 |
| 3. | தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையம் | 19 |
| 4. | தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையம் | 24 |
| 5. | ஊழல் தடுப்பு மற்றும் காண்காணிப்பு இயக்ககம் | 26 |
| 6. | ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் | 30 |
| 7. | தமிழ்நாடு லோக் ஆயுக்தா | 33 |
| 8. | ஆய்வுப் பிரிவு | 34 |
| 9. | பயிற்சி | 37 |
| 10. | புதிய முயற்சிகள் | 50 |
| 11. | முடிவுரை | 53 |

## மனித வள மேலாண்மைத் துறை

## 2024-2025 - ஆம் ஆண்டிற்கான

## கொள்கை விளக்கக் குறிப்பு

### 1. முன்னுரை

*"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்"*

*(குறள் 517 - தெரிந்து வினையாடல்)*

*(இச்செயலை இக்காரணங்களால் இவன் முடிக்க வல்லவன் என்று ஆராய்ந்து அச்செயலை அவனிடத்தே விடுதல் வேண்டும்.)*

"மகத்தான மனித வளம்
அதன்மூலம் மக்கள் நலம்"

என்பதே இத்துறையின் குறிக்கோள் ஆகும்.

1(1) அரசுப் பணியாளர்களின் நிர்வாகத்திற்கென சிறப்புக் கவனம் செலுத்த வேண்டி, 1973 ஆம் ஆண்டு மாநில நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் முக்கிய பரிந்துரைகளில் ஒன்றாக. பொதுத் துறையிலிருந்து ஒரு புதிய ஒருங்கிணைந்த துறையாக, பணியாளர் மற்றும்

நிர்வாக சீர்திருத்தத் துறை 1976 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

அரசுப் பணியாளர்களின் சேவையின் தரத்தை உயர்த்துவதற்காக, அவர்களுடைய பணி மற்றும் பயிற்சிகள் தொடர்பான நிர்வாக அமைப்புகளை வலுப்படுத்துவதும், பராமரிப்பதும் இத்துறையின் முக்கியப் பணிகளாக உள்ளன. இத்துறையின் பணியமைப்பினை மேலும் செம்மைப்படுத்துவதற்காக, தனியே செயல்பட்டு வந்த பயிற்சித் துறை தாய்த் துறையுடன் இணைக்கப்பட்டு மனித வள மேலாண்மைத் துறையாக மலர்ந்தது. அரசுத் துறைகளில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே கணித்தல், மனித வளம் தொடர்புடைய வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுதலும், அவற்றை தொடர்ச்சியாக கண்காணிப்பதும் இத்துறையின் முதன்மைப் பணியாக உள்ளது. பொது மக்களுக்காக ஆற்றும் சேவையைப் பொறுப்புடனும், அவர்களின் தேவைகளை அறிந்து செயல்படும் நோக்குடனும், அரசின் சேவைகளை மக்கள் எளிதில் பெறுவதற்குரிய பணிகளை செவ்வனே ஆற்றும் அரசுப் பணியாளர்களை ஊக்கப்படுத்துவதும்

பாராட்டுவதும் மனிதவளத்தை மேம்படுத்தும் கொள்கையின் ஒரு பகுதியாகும்.

அரசுப் பணிக்கான உரிய நபர்களை தேர்ந்தெடுத்தலும், பயிற்சி அளித்தலும், அவர்களை ஒழுங்குபடுத்துதலும், அவர்களுக்கு உரிய பதவி உயர்வுகளை வழங்குதலும் மனித வள மேலாண்மைத் துறையின் பணிகளாகும்.

1(2) இத்துறை மேற்கொள்ளும் செயல்பாடுகள் பின்வருமாறு:

(அ) சட்டபூர்வ பணிகள்

(ஆ) நிருவாகப் பணிகள்

(இ) ஆலோசனை வழங்கும் இனங்கள்

(ஈ) பயிற்சி

1(2) (அ) சட்டபூர்வ பணிகள்

இத்துறையால் நிர்வகிக்கப்படும் முக்கிய சட்டங்கள்

- தமிழ் நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 [தமிழ் நாடு சட்டம் எண். 14/2016];

- 2010 – ஆம் ஆண்டு தமிழ் நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணிநியமனம் செய்தல் சட்டம். (தமிழ் நாடு சட்டம் எண்.40/2010);

- தமிழ் நாடு லோக்ஆயுக்தா சட்டம், 2018 (தமிழ் நாடு சட்டம் எண்.33/2018);

- தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டம், 2022 [தமிழ் நாடு சட்டம் எண். 14/2022];

<u>1(2) (ஆ) நிருவாகப் பணிகள்</u>

பணியாளர்கள் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை அனைத்துத் துறைகளும் பின்பற்றுவதை மனித வள மேலாண்மைத் துறை உறுதிப்படுத்துகிறது. விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் புதுப்பித்தலையும், எளிமைப்படுத்தும் பணிகளிலும் இத்துறை உரிய ஆலோசனைகளை வழங்குகிறது.

பணி விதிகள்

i. தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்.
ii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள்.
iii. தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிக்கான சிறப்பு விதிகள், 1952.
iv. தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகள், 1952.
v. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955.
vi. தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955.
vii. தமிழ்நாடு பொதுப்பணிக்கான சிறப்பு விதிகள், 1969 இனம் XII மற்றும் XII-A.
viii. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிக்கான சிறப்பு விதிகள்- இனம் XXII
ix. தமிழ்நாடு அடிப்படைப் பணிக்கான சிறப்பு விதிகள், 1971.

அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகள் தொடர்பான விதிகள்

x. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறைகள், 1954

xi. தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005

xii. தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012

xiii. தமிழ்நாடு தகவல் ஆணையப் பணி விதிகள், 2017

xiv. தமிழ்நாடு லோக் ஆயுக்தா விதிகள், 2018.

xv. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) விதிகள், 2022.

<u>1(2) (இ) ஆலோசனை வழங்கும் இனங்கள்:-</u>

தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள், தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள் உள்ளிட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை வரையறுத்துச் செயல்படுத்தும் துறையாக இத்துறை இருப்பதால், பல்வேறு வழிகாட்டுதல்கள் மற்றும் சட்டக்கூறுகள் உள்ளிட்ட ஏனைய பின்வரும் நேர்வுகளில் இத்துறையை தலைமைச் செயலகத் துறைகள் கலந்தாலோசிக்கின்றன:-

- காலியிடங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பல்வேறு பதவிகளுக்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயாரித்தல்;

- பணி வரன்முறை மற்றும் தகுதிகாண் பருவ விளம்பல் நேர்வுகளில் தெளிவுரைகள் வழங்குதல்;
- அடிப்படை விதிகளில் தெளிவுரைகள் வழங்குதல்;
- முதுநிலைத் திருத்தம் தொடர்பான கருத்துருக்களை ஆய்வு செய்தல்;
- சிறப்பு / தற்காலிக விதிகளை உருவாக்கவும் திருத்தங்கள் மேற்கொள்ளவும் ஆலோசனை வழங்குதல்;
- அரசுப் பணியாளர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்த நேர்வுகளில் ஆலோசனை வழங்குதல்.

1(2) (ஈ) பயிற்சி

அரசு ஊழியர்களின் பணித் திறமையை தொடர்ந்து மேம்படுத்தி, அவர்தம் பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றும் வகையில், அடிப்படை மற்றும் இடைநிலைப் பயிற்சிகளை அளிப்பது இத்துறையின் முக்கியச் செயலாகும்.

1(3)இத்துறையின் குறிக்கோள்கள் பின்வரும் அரசமைப்பு, சட்டரீதியான அமைப்புகள் மற்றும் நிருவாக அமைப்புகளால் செயல்படுத்தப் படுகிறது :-

அ) அரசமைப்பு நிறுவனம்

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆ) சட்டரீதியான அமைப்புகள்

- தமிழ்நாடு தகவல் ஆணையம்
- தமிழ்நாடு லோக் ஆயுக்தா
- விழிப்புப்பணி ஆணையம்
- ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்

இ) நிருவாக அமைப்புகள்

i. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

ii. பயிற்சித்துறைத் தலைவர்

## 2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)-ன் கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், தலைவர் மற்றும் பதினான்கு உறுப்பினர்கள் கொண்டதாகும். தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள், 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் நிருவகிக்கப்படுகின்றன.

மாநில அரசுக்குத் தேவையான மனித வளத்தினை தெரிவு செய்து அளிக்கும் பணியில் தேர்வாணையம் முதன்மைத் தெரிவு முகமையாகச் செயல்பட்டு வருகின்றது. அரசுத் துறைகளின் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு தகுதிகளும், திறனறிவும் கொண்ட நபர்களை தேர்வாணையம் தெரிவு செய்கிறது.

### 2(1) பொதுவான பணிகள்

அரசுப் பணிகளுக்கு பணியாளர்களை தெரிவு செய்வது மட்டுமின்றி அப்பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளையும் நடத்தி அவர்களை அரசுப்பணியின் முழு

உறுப்பினராக வழி வகை செய்வதுடன், அகில இந்தியப் பணிகள் மற்றும் மாநிலப் பணிகள் சார்ந்த அலுவலர்களுக்கான மொழித் தேர்வுகளையும் ஆண்டிற்கு இருமுறை நடத்துகிறது. இதுமட்டுமின்றி, ஒன்றிய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரி சார்பாக மாணவர்களுக்கான நுழைவுத் தேர்வையும் தேர்வாணையம் நடத்துகிறது.

மேலும், பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் முறையில் நியமனம் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகளை வகுப்பது குறித்தும், அரசுப் பணியாளர்கள் தொடர்பான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு குறித்தும் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

## ஆண்டு திட்ட அட்டவணை

தேர்வர்கள் தங்களை முன்னதாகத் தயார் செய்து கொள்ள ஏதுவாக, ஒவ்வொரு ஆண்டும் தொடங்குவதற்கு முன்னரே, தேர்வாணையம் போட்டித்

தேர்வுகளுக்கான ஆண்டு திட்ட அட்டவணையை வெளியிடுகிறது. மேலும், தேர்வர்களின் வசதிக்காக, பல்வேறு தேர்வுகளுக்கானப் பாடதிட்டங்களும் தேர்வாணையத்தின் வலைதளத்தில் பராமரிக்கப்படுகிறது.

## 2(2) தெரிவு நடவடிக்கையில் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துதல்

அரசுப் பணிகளுக்கான தெரிவுகளில், பொருத்தமான தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற போட்டித் தேர்வுகள் வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்படுகின்றன என்ற பெரும் நம்பிக்கையை வேலை வாய்ப்பினை எதிர்நோக்கிக் காத்திருக்கும் இளைஞர்களின் மனங்களில் ஏற்படுத்தும் வண்ணம் தேர்வாணையம் முனைப்புடன் செயல்படுகிறது.

### i. தெரிவுகளில் தேர்வர்களின் பங்கேற்பு

- ✓ தெரிவு செயல்முறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையைக் கடைபிடிக்கும் வகையில் தேர்வு முடிவடைந்த உடன் கொள்குறி வகைக்குரிய உத்தேச விடைகள் (Tentative

Keys) தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

- ✓ தேர்வர்களுக்கு விடைகள் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அது குறித்த கோரிக்கைகளை ஏழு நாட்களுக்குள் தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

- ✓ கொள்குறித் தேர்வுகள் முடிந்த பின்னர் தவறான வினாக்கள் மற்றும் விடைகள் குறித்து தேர்வர்களின் கருத்துகளை இணைய வழியில் பெறும் நடைமுறையை அறிமுகப்படுத்தியதால் இறுதி விடைகள் (Final Answer Keys) விரைவாக வெளியிடப்படுகின்றன.

<u>தொழில் நுட்ப அடிப்படையிலான பாதுகாப்புகள்:-</u>

- ✓ தேர்வு நடைமுறைகளில் கண்காணிப்பினை பலப்படுத்தும் பொருட்டு, தேர்வு நடைபெறும் தேர்வுக்கூடங்கள் / அறைகள், ஒளிப்பதிவுக் கருவிகளின் வழியாக கண்காணிக்கப்படுகின்றன.

- ✓ அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தேர்வு எழுதுபவர்களின் பெயர், பதிவு எண், புகைப்படம் போன்ற அனைத்து விவரங்களும் அச்சிடப்பட்ட தன்விவர கொள்குறி விடைத்தாட்கள் (Personalised OMR) வழங்கப்பட்டு வருகின்றன.
- ✓ வெளிமாவட்ட மையங்களிலிருந்து தேர்வாணையத்திற்கு மந்தணத்தன்மை கொண்ட பொருட்களை கொண்டுவரும் வாகனங்களில் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டு, முழுவதும் பதிவு செய்யப்படுகிறது.
- ✓ தேர்வுத் தொடர்பான பொருட்களைக் கொண்டு வரும் வாகனங்கள் மற்றும் அவற்றின் நகர்வுகளை GPS trackers மூலம் கண்காணிக்கும் வசதியும், GPS lock மூலம் திறந்தும் மூடும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ✓ GPS lock திறப்பதற்கான கட்டளைகள் தேர்வாணைய அலுவலகத்தில் இயங்கும் கண்காணிப்பு குழுவினரால் மட்டுமே வழங்க இயலும்.

- ✓ தேர்வுத் தொடர்பான மந்தணத்தன்மைக் கொண்ட பொருட்களைக் கொண்டு வரும் வாகனங்களை ஒரு வருவாய் அலுவலர், காவல் துணை ஆய்வாளர், தேர்வாணைய அலுவலர் ஆகியோர் கொண்ட உடன் வரும் வழிக்காவல்குழுவைக் (Escort) கொண்டு தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

<u>2(3) ஒரு முறை பதிவு செய்தல்</u>

(i) <u>பதிவுகளும் தரவுகளும்</u>

- ✓ தேர்வர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எளிதாக வெளிப்படைத் தன்மையுடன் விளங்க 'ஒரு முறை பதிவு செய்தல்' (One Time Registration) முறை செயல்பாட்டில் உள்ளது. அதில் தேர்வர்கள் தமது அடிப்படை விவரங்களை கையொப்பம் மற்றும் புகைப்படத்துடன் நிரந்தரமாக தரவுதளத்தில் பதிவு செய்யலாம். இப்பதிவானது ஐந்து ஆண்டுகளுக்குச் செல்லத்தக்கதாகும். பிறகு இதனைப் புதுப்பித்துக் கொள்ளலாம். ஒன்றுக்கும் மேற்பட்ட ஒருமுறைப்பதிவு அடையாள விவரங்களை

(Identification) உருவாக்குவதை தடுக்கும் வகையில், விண்ணப்பதாரர்கள் தங்களுடைய பதிவுடன் ஆதார் விவரங்களை இணைப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(ii) <u>இணைய வழி விண்ணப்பம் மற்றும் சான்றிதழ் சரிபார்த்தல்</u>

- ✓ அனைத்துத் தேர்வுகளுக்கும், இணையதளம் வழியே விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.
- ✓ தேர்வாணையம், இணைய வழியில், பொதுச் சேவை மையங்கள் மூலமாக சான்றிதழ் சரிபார்த்தல் முறையை அறிமுகப் படுத்தியுள்ளதால் தேர்வர்களுக்கு நேரும் பயணச்செலவும், கால விரயமும் தவிர்க்கப்படுகிறது.

(iii) <u>ஒருங்கிணைந்த கைப்பேசி செயலி</u>

- ✓ அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளை எதிர்நோக்கிக் காத்திருக்கும் விண்ணப்பதாரர்கள், மாநிலத்தின் தெரிவு முகமைகள் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்த

தகவல்களை அறிந்து கொள்வதற்கும், விண்ணப்பத்தினை எளிதாகப் பதிவேற்றம் செய்யவும் ஒருங்கிணைந்த கைப்பேசி செயலி ஒன்று உருவாக்கப்பட்டுவருகிறது.

(iv) தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கலந்தாய்வு

- ✓ அலகு / பணி ஒதுக்கீட்டிற்கு கலந்தாய்வு முறை பின்பற்றப்படுவதுடன், காலிப்பணியிடங்கள் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் உடனுக்குடன் வெளியிடப்படுகிறது.

(v) மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வசதிகள்

- ✓ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அனைத்துத் தேர்வு மையங்களிலும் மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் தரைத் தளத்திலேயே தேர்வு எழுதுவதற்கு வசதி செய்து கொடுத்துள்ளது. தேவை ஏற்படின், உதவியாளர்களும் வழங்கப்படுகின்றனர். மேலும், குறிப்பிட்ட வகையிலான மாற்றுத்திறனாளி விண்ணப்பதார்கள் பயன்பெறும் வகையில் தேர்வு எழுதுவதற்கு கூடுதல் நேரம் வழங்கப்படுகிறது.

2(4) துறை பதவி உயர்வுக் குழு

அரசுப் பணியாளர்களின் பதவி உயர்வு தொடர்பாக, துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் கருத்துருக்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க ஒற்றைச் சாளர முறை, தேர்வாணையத்தால் பின்பற்றப்படுகிறது.

பதவி உயர்வு மற்றும் மாறுதல் மூலம் பணி நியமனம் பெறும் தொகுதி-A ஊதிய நிலை 25-க்கு மேல் உள்ள நுழைவு நிலையிலான பதவிகள் மட்டும் தேர்வாணையத்தின் துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகிறது. ஏனைய அனைத்துப் பதவிகளுக்குமான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல், அந்தந்தத் துறைகளுக்கான பதவி உயர்வு குழுவின் வாயிலாகவே பரிசீலிக்கப்படுகின்றது.

**2(5) கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு**

மாநிலத்தில் உள்ள அனைத்து தெரிவு முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப, 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்

பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தில் உரிய திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

## 2(6) துறைத் தேர்வுகள்

தேர்வாணையம் மே 2021 ஆம் ஆண்டு முதல் பதவி உயர்வுக்கு தேவையான துறைத் தேர்வுகளை கணினி வழியே நடத்தி வருகிறது.

## 2(7) தேர்வாணையத்திற்குக் கூடுதல் பணிகள்

அரசுத் துறைகள் மற்றும் அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாளர்களின் தெரிவு சீராக அமைய தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சட்டப்பூர்வமான வாரியங்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகளில் உள்ளப் பணியிடங்களை நிரப்பும் வகையில் தேர்வாணையத்திற்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டம், 2022 மற்றும் அதற்குரிய விதிகள் இயற்றப்பட்டுள்ளன. இச்சட்டம் 17.03.2022 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2(8) ஆண்டறிக்கை

ஆணையத்தின் ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டும் மாநில சட்டமன்ற பேரவையில் வைக்கப்படுகிறது.

## 3. தமிழ்நாடு தகவல் ஆணையம்

ஒவ்வொரு பொது அதிகார அமைப்பின் செயல்பாட்டிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்காக, அவற்றின் கட்டுப்பாட்டின் உள்ள தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்கு, தகவல் அறியும் உரிமைச் சட்டம் வழிவகுக்கின்றது. ஆளுகையில் மக்களின் பங்கேற்பினை இது உறுதி செய்கின்றது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன் படி 07.10.2005 அன்று தமிழ்நாடு தகவல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. ஆணையம் ஒரு தலைமை தகவல் ஆணையர் மற்றும் ஆறு தகவல் ஆணையர்களைக் கொண்டதாகும்.

பொதுத் தகவல் அலுவலர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரர் கோரும் தகவலை குறிப்பிட்டக்

கால வரம்பிற்குள் வழங்குவதற்குப் பொறுப்பானவர். அதன் மீதான மேல்முறையீடு, பொது அதிகார அமைப்பினால் பதவியமர்த்தப்பட்ட மேல்முறையீட்டு அலுவலரால் தீர்வு செய்யப்படுகிறது. மேற்படி சட்டத்தின்படி, இரண்டாவது மேல்முறையீடு மாநிலத் தகவல் ஆணையத்தால் தீர்வு செய்யப்படுகிறது.

பணிகள், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்வதற்கும் சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுவதற்கும் பொது மக்களுக்கு இச்சட்டம் அதிகாரம் அளிக்கிறது.

மேலும், அனைத்துத் துறைகளும் தத்தமது துறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற மக்கள் நலதிட்டங்கள் மற்றும் இதர பொது முக்கியத்துவம் வாய்ந்த விவரங்கள் அனைத்தையும் தாமாகவே முன்வந்து வெளியிட்டு வருகின்றன.

<u>3(1) இணைய வழி சேவை</u>

தகவல்களை பொது மக்கள் எளிதாக பெறுவதற்காக இணைய வழி சேவை படிப்படியாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுக்களையும், முதல் மேல்முறையீட்டு மனுக்களையும், இணைய வழியில் (www.rtionline.tn.gov.in) கட்டணம் செலுத்திப் பெறுவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது மேல் முறையீட்டையும் இணையவழியில் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான வழக்குப் பட்டியல்கள் மற்றும் முடிவுகள் ஆணையத்தின் இணையதளத்தில் (www.tnsic.gov.in) பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்கள், சென்னையில் உள்ள மாநில தகவல் ஆணையத்திற்கு வருவதற்கு பதிலாக, தத்தமது ஊர்களில் இருந்தவாறே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள தேசிய தகவல் மையத்தின் தொடர்புடன் , காணொளி மூலமாக தினசரி விசாரணையினை 10.06.2024 முதல் மேற்கொள்ளும் வசதியை தமிழ்நாடு தகவல் ஆணையம் தொடங்கியுள்ளது.

3(2) மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் பெறும் வசதி

பார்வைத்திறன் குறைபாடு உடையோர்களின் கோரிக்கையின் அடிப்படையில், ஆணையத்தின் ஆணைகள், பிரெய்லி எழுத்து வடிவில் வழங்கப்படுகிறது. இச்சேவை வழங்குவதில் இவ்வாணையம் நாட்டிலேயே முன்னோடியாகத் திகழ்கிறது.

3(3) உதவி மையம்

பொது மக்கள் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் மற்றும் தகவல் அளித்தல் தொடர்புடைய பல்வேறு நடைமுறைகள் குறித்து தேவையான உதவிகளை வழங்கும் வகையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வளாகத்தில் ஓர் உதவி மையம் (Help Desk) செயல்பட்டு வருகிறது.

3(4) நிலையான வளர்ச்சி இலக்குகள்

நிலையான வளர்ச்சி இலக்குகளைப் பொறுத்தவரை, பின்வரும் விவரங்கள் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துகின்றன:-

- ✓ மாநிலம் முழுவதும் ஆண்டுதோறும் 3 லட்சத்திற்கும் அதிகமான தகவல் பெறும்

உரிமைச் சட்ட மனுக்கள் பெறப்பட்டு அவை, தகவல் பெறும் உரிமைச் சட்ட விதிகளின்படி, பொதுத் தகவல் அலுவலர்களால் தீர்வு செய்யப்படுகின்றன.

- ✓ அரசு அலுவலகங்களில் தகவல் கோரி வருகின்ற பொதுமக்களின் வருகை கணிசமாக குறைந்துள்ளது. (குறியீடு எண்.16.6.3).
- ✓ பொது மக்களால் கோரப்படும் தகவல்கள், கால வரம்புக்குள் அளிக்கப்பட்டு வருகின்றன. (குறியீடு எண்கள்.16.6.2 மற்றும் 16.10.1).

3 (5) ஆண்டு அறிக்கை

ஆணையத்தின் ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டும் மாநில சட்டமன்ற பேரவையில் வைக்கப்படுகிறது.

## 4. தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையம்

4(1) தமிழ்நாடு விழிப்புப்பணி ஆணையம் 1965-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பொதுப் பணிகளில், ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட நிருவாக ரீதியான பணிகளில் அரசுக்கு அறிவுரை வழங்குவதும் ஊழல் குறித்த ஒவ்வொரு இனங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குவதும் இவ்வாணையத்தின் பணியாகும். மாநிலத்தின் சட்டபூர்வ அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து வகையான அலுவலகங்களிலும் பணியாற்றும் ஊழியர்கள்/ அலுவலர்கள் ஆணையத்தின் வரம்பிற்குள் வருவர்.

**<u>4 (2) விழிப்புப் பணி ஆணையத்தின் நோக்கங்கள்:</u>**

(i) பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்து கொண்டதாகவோ அல்லது ஊழல் புரிந்துள்ளதாகவோ அல்லது தன்னுடைய அதிகாரத்தை தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காக பயன்படுத்தியதாகவோ அல்லது

தனது அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார் மீது விசாரணை மேற்கொள்ளுதல்:

(ii) இதற்காகத் தேவைப்படும் தகவல் அல்லது புள்ளி விவரங்களைச் சேகரித்தல்: மற்றும்

(iii) தமது வரம்பிற்குட்பட்ட செயல்பாடுகள் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை, அரசுத் துறை அல்லது நிறுவனம் அல்லது பொது ஊழியரிடமிருந்து கேட்டுப் பெறுதல்.

4 (3) ஆண்டு அறிக்கை

ஆணையத்தின் ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டும் மாநில சட்டமன்ற பேரவையில் வைக்கப்படுகிறது.

## 5. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

5 (1) பொது நிருவாகத்தில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளைத் திறம்படக் கையாளும் பொருட்டு, முதன் முதலாக 1964-இல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வியக்ககத்திற்கு காவல் துறை இயக்குநர் (DGP) நிலையில் ஓர் இயக்குநர் தலைமை வகிக்கிறார். இயக்குநருக்கு உறுதுணையாக இணை இயக்குநர், துணை இயக்குநர், காவல் கண்காணிப்பாளர், துணைக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் சட்ட அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இவ்வியக்ககத்தின் கீழ் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்கள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

5 (2) ஊழல் கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகத்தின் முக்கியப் பணிகள் :-

i) மாநில அரசு, மாநில விழிப்புப்பணி ஆணையம் மற்றும் லோக் ஆயுக்தா ஆகியவற்றால் பரிந்துரைக்கப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் அது தொடர்பான முறைகேடுகளின் மீது விசாரணைகள் / புலனாய்வு மேற்கொள்வது.

ii) இவ்வியக்ககத்தால் சேகரிக்கப்படும் தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களை மாநில விழிப்புப்பணி ஆணையருக்கு தெரியப்படுத்துதல்.

iii) பொது ஊழியர்கள் மீதான இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்களின் மீது விசாரணை மேற்கொள்வது.

iv) ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் பெறப்படும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான புகார்களில் நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து ஊழல் தடுப்புச் சட்டம் 1988 மற்றும் ஊழல் தடுப்பு (திருத்தச்) சட்டம் 2018-இன்படி புலனாய்வு செய்வது.

v) உரிய ஆதாரங்களுடன் கூடிய புகார்களின் அடிப்படையில், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசு ஊழியர்களை, இலஞ்சம் வாங்கும்பொழுது, தகுந்த முறைகளைப் பின்பற்றி கையும் களவுமாகப் பிடித்தல்.

5(3) ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து விசாரிப்பதற்காக, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய எட்டு இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள்

செயல்படுகின்றன. மேலும், மாநிலம் முழுவதும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள முதன்மை அமர்வு நீதிபதிகளுக்கும், மாவட்ட சிறப்பு நீதிமன்றங்களிலுள்ள நீதிபதிகளுக்கும், ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

5(4) அவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் வழக்குகளில் ஊழல் புகார்கள் தொடர்பான வழக்குகளின் ஆண்டு வாரியான புள்ளி விவரங்கள் இயக்கக இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன. மின்னஞ்சல் வாயிலாகப் பெறப்படும் புகார்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

5(5) காவல்துறையில் உள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு மண்டலங்களை கருத்தில் கொண்டு, (i) சென்னை நகர சரகம் (ii) வடக்கு சரகம் (iii) மேற்கு சரகம் (iv) மத்திய சரகம் மற்றும் (v) தெற்கு சரகம் ஐந்து சரகங்களில் 46 பிரிவுகளாக இவ்வியக்ககம் செயல்பட்டு வருகின்றது. மேலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் மீதான வழக்குகளை விசாரிப்பதற்காக ஒரு சிறப்பு புலனாய்வு பிரிவு (SIC) ஏற்படுத்தப்பட்டு கடந்த 1996 முதல் இயங்கி வருகிறது.

5(6) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாத இறுதி வாரத்தில் விழிப்புணர்வு வார விழா நடத்தப்படுகிறது.

5(7) வருமானவரி, வங்கிகள் மற்றும் பொருளாதார கணக்கு விவரங்கள் தொடர்பான பெருமளவிலான கணக்கு விவரங்களையும், பதிவேடுகளையும், நிறுவனங்களின் பதிவாளர்களிடமிருந்து பெற்று கூர்ந்தாய்வு செய்யவும், மின்னணு சார்ந்த கருவிகளை கனிணி வன்பொருள், மடிக்கணிணிகள், கைபேசிகள் போன்றவற்றின் விவரங்களை கூர்ந்தாய்வு செய்யவும் இவ்வியக்கக விசாரணை அதிகாரிகளுக்கு உதவி செய்யும் நோக்கில் (i) பட்டயக் கணக்கர்கள் (ii) ஓய்வு பெற்ற வங்கி அலுவலர்கள் (iii) ஓய்வு பெற்ற வருமான வரி அலுவலர்கள் மற்றும் (iv) இணையதள குற்ற தடயவியல் நிபுணர்கள் போன்ற நிபுணர்களின் சேவைகளைப் பெற அனுமதி அளித்திருப்பதுடன் மேற்படி கூர்ந்தாய்வுக்கு தேவையான மென்பொருட்களை வாங்கவும் நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டுள்ளது.

## 6. ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்

6(1) மாநில அரசிலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கு ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தீர்ப்பாயம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணையின் பொருட்டு, தேவைப்படும் சாட்சியங்களை விசாரிக்கவும், தொடர்புடைய ஆவணங்களைக் கோருவதற்கான அதிகாரங்களைப் பெற்ற ( Quasi Judicial) அமைப்பாகும். இவையாவும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955-இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்கின்றன.

6(2) சென்னை, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் ஆறு ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்திய ஆட்சிப்பணி

அலுவலர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள் தலைமையில் செயல்படும் இத்தீர்ப்பாயங்களில் வழக்குகள் தொடர்பான விசாரணைகளுக்கு உதவி புரியும் வகையில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் உள்ள சட்ட நடவடிக்கை தொடர்புடைய வழக்குரைஞர்களின் (Prosecutors for Disciplinary Proceedings) சட்டக் கருத்துகள் / ஆலோசனைகள் பெறப்படுகின்றன. வழக்கின் மீதான விசாரணை அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலர் தொடர்புடைய அரசு நிருவாகத் துறைக்கு தீர்ப்பாயத்தால் அனுப்பப்படும். அவ்வறிக்கையினை ஆய்வு செய்து ஒழுங்கு நடவடிக்கை மீதான இறுதி ஆணைகளை அரசு பிறப்பிக்கும்.

<u>6(3) துறை ஒழுங்கு நடவடிக்கைகளுக்கான வழிகாட்டி நெறிமுறைகள்</u>

- ✓ அரசுப் பணியாளர்கள் தங்களது பணியில் ஏற்பட்ட குறைபாடுகளுக்காக, பொறி வைத்துப் பிடிக்கப்படுவது மற்றும் கைது செய்யப்படுவது உள்ளிட்ட குற்ற வழக்குகளின் தொடர்ச்சியாக அவர்கள் மீது எடுக்கப்படுகின்ற துறை சார்ந்த

ஒழுங்கு நடவடிக்கைகளில் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- ✓ அரசுப் பணியாளர்கள் தற்காலிகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட நேர்வுகளில் பணியிடை நீக்கம் தொடரலாமா அல்லது ரத்து செய்து மீண்டும் பணியில் சேர்க்கலாமா என்பது குறித்து உரிய அலுவலரால் குறிப்பிட்டக் கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் அடங்கிய தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- ✓ ஒழுங்கு நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், அதன் ஒவ்வொரு நிலையிலும் வரையறுக்கப்பட்ட கால அளவுகள் தவறாமல் பின்பற்றி, கால தாமதத்தைத் தவிர்த்து இறுதி ஆணைகள் விரைவாக வெளியிடப்பட வேண்டும் என அறிவுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

6(4) தேவையற்ற நடவடிக்கைகளைத் தவிர்த்து, பணிகளில் எவ்விதத் தொய்வும் ஏற்படாத வண்ணம், பணியாளர்கள் மீதான துறை ஒழுங்கு நடவடிக்கைகள்

மற்றும் தற்காலிகப் பணியிடை நீக்க நேர்வுகள் குறித்து நிருவாகத்துறைகள் ஆய்வு செய்திட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

## 7. தமிழ்நாடு லோக் ஆயுக்தா

7(1) லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013ன் பிரிவு 63க்கு இணங்க தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம், 2018, தமிழ்நாடு சட்டமன்றத்தால் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் விதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. மேற்படி சட்டம் 13.11.2018 அன்று நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு லோக் ஆயுக்தா 21.04.2019 முதல் செயல்படத் துவங்கியது.

7(2) தமிழ்நாடு லோக் ஆயுக்தா, நீதிமுறை சார்புடைய (Quasi Judicial) அமைப்பாகும். பொது ஊழியர்களுக்கு எதிரான ஊழல் மற்றும் தொடர்பான புகார்களை விசாரிப்பதற்காக தமிழ்நாடு லோக் ஆயுக்தா ஏற்படுத்தப்பட்டுள்ளது.

7(3) தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டத்தின் நோக்கம் தூய்மையான நிர்வாகத்தையும்,

வெளிப்படைத்தன்மையும், பொறுப்புணர்வையும், செம்மையான நிர்வாகத்தையும் உறுதிப்படுத்துவதாகும்.

7(4) தமிழ்நாடு லோக் ஆயுக்தா தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களை கொண்டதாகும். பல்வேறு நிலைகளிலான 103 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

7(5) போதுமான பணியாளர்களைப் பணியமர்த்தி தமிழ்நாடு லோக் ஆயுக்தாவினை வலுப்படுத்தியுள்ளதுடன், அதற்குத் தேவையான அலுவலகம், வாகனங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

## 8. ஆய்வுப் பிரிவு

8 (1) அலுவலக நிருவாகத்தில் செயல்திறனை மேம்படுத்தவும், காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கவும், தலைமைச் செயலகத் துறைகள், தலைமை அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் மாநகராட்சி அலுவலகங்கள் ஆகியவை ஆய்வுப் பிரிவின் அலுவலர்களால் கால முறையில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

8 (2) தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் குழுக்கள் இயங்கி வருகின்றன. அரசு துணைச் செயலாளர் நிலையிலுள்ள அலுவலர்களின் தலைமையில் தேவையான பணியாளர்களுடன் இந்த ஆய்வுக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. ஆய்வுத் திட்ட நிகழ்ச்சி நிரல்கள் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குழுவும் தனித்தனியாக முதனிலை ஆய்வு செய்யும். ஆய்வுக்குப் பிறகு, முதனிலை ஆய்வுக் குறிப்புகளில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளின் பேரில், குறைகளைவு அறிக்கை அளிக்க வேண்டி ஆய்வுக்குறிப்புகள் அந்தந்த அலுவலகத்திற்கு வழங்கப்படுகிறது. அவ்வலுவலகத்திலிருந்து குறைகளைவு அறிக்கை பெறப்பட்ட பிறகு, இறுதி ஆய்வு, இந்திய ஆட்சிப் பணி அலுவலரால் மேற்கொள்ளப்படுகிறது. இறுதி ஆய்வு அலுவலர் அளிக்கும் பொதுவான கருத்துக்களின் அடிப்படையில், தலைமைச் செயலகத்தில் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையால், தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆய்வுக் குழுவிற்கு நகல் அனுப்புவதுடன், அவை பதிவு செய்து கொள்ளப்படும்.

8(3) மாநிலத்திலுள்ள அனைத்து அலுவலகங்களிலும், மாவட்ட அளவில் அமைந்துள்ள 11 மாவட்ட ஆய்வுக் குழுக்களால் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்ட ஆய்வுக் குழுவும், துணை ஆட்சியர் தலைமையில் ஒரு துணை ஆய்வுக் குழு அலுவலர் மற்றும் இதர பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. இக்குழுக்கள், தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் அலுவலகங்களில் வருடாந்திர ஆய்வு மேற்கொள்வதுடன், திடீர் ஆய்வும் மேற்கொள்ளும். மேலும், அந்தந்த மாவட்ட விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புத் துறையினரால் மேற்கொள்ளப்படும் ஊழல் தொடர்பான திடீர் சோதனைப் பணிகளிலும், இந்த ஆய்வுக் குழுக்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

8(4) 2023 - 2024 ஆம் ஆண்டு, மார்ச் 2024 வரையில், தலைமைச்செயலக துறைகள், துறை தலைமை அலுவலகங்கள் மற்றும் வாரியங்களில், இத்துறையின் ஆய்வுக் குழுக்களால் 19 முதனிலை ஆய்வுகள் மற்றும் 10 இறுதி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், 2023-2024 ஆம் ஆண்டு, மார்ச் 2024 வரையிலான காலத்தில், மாவட்ட ஆய்வுக் குழுக்கள், 121 ஆண்டாய்வுகள் மற்றும் 3036 திடீர் ஆய்வுகளை மேற்கொண்டதுடன், அந்தந்த மாவட்ட விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புக்குழு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் 108 கண்காணிப்புக் கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

## 9. பயிற்சி

9(1) மனித வள மேலாண்மைத் துறை பல துறைகள் பயன்படுத்தத்தக்க விரிவான பயிற்சிக் கொள்கையைக் கொண்டு வந்திருக்கிறது. அரசுத் துறைகள் மனித வள மேலாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பயிற்சி அலகுகளைக் கொண்டு பணியாளர்களின் செயல்திறனை அதிகரிக்கச் செய்கின்றன.

### 9(2) பயிற்சித் துறைத் தலைவர்

அரசின் பல்வேறு பிரிவுப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பின்வரும் நிறுவனங்கள் மனித வள மேலாண்மைத் துறையின் கீழ் வருகின்றன:-

1. அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி
2. அ மற்றும் ஆ அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையம்
3. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

தமிழ்நாட்டைச் சார்ந்த இளைஞர்கள் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்காக, பின்வரும் நிறுவனங்களில் உரிய பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன:-

4. அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம்
5. போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள்

அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியின் இயக்குநரே பயிற்சித் துறைத் தலைவராகவும் செயல்படுகிறார். மேற்கண்ட அனைத்து நிறுவனங்களும் அவருடைய மேற்பார்வையில் வருகின்றன.

**<u>9(3)அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி</u>**

அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி, அரசுப் பணியாளர்கள் தங்கள் பணிகளைத் திறம்படச் செய்திட உதவும் வகையில் மேலாண்மை, செயல்திறன்

பயிற்சிகளை அளித்து வருகிறது. விரைவில் பயிற்சியளிக்கும் நோக்குடன் மதுரை, திருச்சி, சேலம் ஆகிய இடங்களில் 2014-ஆம் ஆண்டிலும், செங்கல்பட்டில் 2022-ஆம் ஆண்டிலும் மண்டலப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டன.

தமிழ்நாட்டின் நிர்வாகப் பயிற்சி நிறுவனமாக (ATI) அறிவிக்கப்பட்டுள்ள அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி அதன் ஒருங்கிணைந்த நிறுவனங்களான அ மற்றும் ஆ அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையம், பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையம் ஆகியவற்றுடன் இணைந்து அனைத்துத் துறைகளுக்கும் முழுமையான பயிற்சியினை அளித்து வருகிறது. பருவநிலை மாற்றம் போன்ற தற்கால சூழலுக்கேற்ற வகையில் பயிற்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடத்தப்படுவதோடு அரசுத் துறைகளிடமிருந்து குறிப்பிட்ட தலைப்பில் பயிற்சிகள் வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்தால் அவையும் நிறைவேற்றப்படுகின்றன.

**<u>நடைபெற்றுவரும் பயிற்சித் திட்டங்கள்</u>**

தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த சார்புச் செயலாளர்களுக்கு மூன்று

மாத கால வகுப்பறை பயிற்சிகள் இரண்டு அணிகளில் நடத்தப்படுகின்றன.

**துறை சார்ந்த பயிற்சிகள்**

வெவ்வேறு துறைகளிடமிருந்து பெறப்படும் கோரிகைக்களுக்கேற்ப உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், விடுதிக் காப்பாளர்கள், ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்தில் பணிபுரிபவர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**பயிற்சியில் புதிய முயற்சிகள்**

**(i) உள்ளரங்கு படப்பிடிப்புத் தளம்**

அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் நேரடி பயிற்சி வகுப்புகள் மட்டுமின்றி, பெரிய வகுப்பறைகளில் இடம், மின்சாரம், தளவாடங்கள் ஆகியவற்றின் பயன்பாட்டினை குறைக்கும் நோக்குடன், புதிய முயற்சியாக, காணொலி வழியாகப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது.

## (ii) அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியின் காணொலிப்பயிற்சி – AIM TN

அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி 2021-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 'AIM TN' என்ற காணொலிப்பாதையை அறிமுகப்படுத்தியது. ஆரம்ப காலத்தில் இந்த காணொலிப்பாதையில் வழக்கு மேலாண்மை, தகவல் பெறும் உரிமை சட்டம் போன்ற பயிற்சிசார் காணொலிகள் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட்டன.

போட்டித் தேர்வுகளை எழுதுவதற்குப் பயிற்றுவிக்க இலவசப் பயிற்சி நிலையங்கள் இல்லாத சூழலில் கிராமப்புறங்களில் வாழும் மாணவர்களுக்கும், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கும் இத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்று அரசுப் பணியில் சேருவது என்பது கனவாக இருந்து வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்திக்கொள்ள மாணவர்களுக்கு உரிய இணையவழி பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

### (iii) நோக்கம் செயலி

அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி போட்டித் தேர்வுகளுக்கென தனியே செயலி ஒன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளது. 'நோக்கம்' என்று பெயரிடப்பட்ட இந்தச் செயலியில் போட்டித் தேர்வர்கள் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம். மத்திய அரசின் தேர்வாணையம் நடத்தும் பன்முகத்திறன் பணியாளர் (MTS) தேர்விற்கான மாதிரித் தேர்வுகள் தற்போது இதில் பதிவேற்றப்பட்டு வருகின்றன.

### (iv) அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தின் காணொலிப்பாதை – AICSCC TN

அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தின் காணொலிப்பாதையான AICSCC TN செப்டம்பர் 29, 2020 அன்று தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டினர் அதிக அளவில் குடிமைப் பணிகளில் சேர வேண்டும் என்ற நோக்குடன் இந்த காணொலிப்பாதை வல்லுநர்கள், அதிகாரிகள், கல்வியாளர்களைக் கொண்டு முதல்நிலை, முதன்மைத் தேர்வுகளுக்கான பயிற்சிக் காணொலிகளைத் தயாரித்து பதிவேற்றி வருகிறது. இந்தக் காணொலிகளுக்கு மத்திய தேர்வாணையம்

(UPSC) தேர்வினை எழுதும் மாணவர்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

**9(4) அ மற்றும் ஆ பிரிவு அடிப்படை பயிற்சி நிலையம்**

'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையத்தில் நேரிடையாகவும், பதவி உயர்வின் மூலமாகவும் பணியமர்த்தப்பட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி அடிப்படை பயிற்சியில், 'அ' பிரிவு அலுவலர்களுக்கு அலுவலக நிர்வாகம், நிதி நிருவாகம், சட்டம், பொது நிதி, பொது நிருவாகம், மேலாண்மை விதிகள், திட்டம் மற்றும் மேம்பாடு, பொருளதாரம், கணினி அறிவியல் ஆகிய பாடங்களில் ஆறு வாரங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

'ஆ' பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் சட்டம், அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், பொது நிருவாகம், மேலாண்மை விதிகள், கணினி அறிவியல் ஆகிய பாடங்களில் நான்கு வாரங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியின் நிறைவாக அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், சட்டம் ஆகிய பாடங்களில் தேர்வு ஒன்றும் நடத்தப்படும். இத்தேர்வில் தேர்ச்சி பெறுவது பயிற்சியாளரின் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்வதற்கு இன்றியமையாததாகும்.

**<u>9(5) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்</u>**

அரசு அலுவலர் பயிற்சி நிலையம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகரில் 1974-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்தின் அருகில் 71.32 ஏக்கரில் அமைந்துள்ள இந்தப் பயிற்சி நிலையத்தில் அரசு அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியானது உறைவிடப் பயிற்சி என்பதால் பயிற்சி பெறுபவர்கள் தங்கள் தனித் திறமைகளை வளர்த்துக்கொள்ளும் வகையில் மாலை வேளைகளில் கல்விசாரா பயிற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள முடிகிறது.

இந்த மையம் தமிழ்நாடு அரசின் அமைச்சுப் பணி மற்றும் நீதித் துறை அமைச்சுப் பணிகளில் நேரடியாகப் பணியமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கும், பதவி உயர்வு மூலம் இளநிலை உதவியாளர், உதவியாளர் பணிகளில்

அமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கும் அடிப்படைப் பயிற்சியினை அளித்து வருகிறது.

அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுள்ள இம்மையத்தில் 700 அலுவலர்கள் ஒரே நேரத்தில் பயிற்சி பெற முடியும்.

## 9(6) அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம்

பட்டியலினத்தைச் சார்ந்த மாணவர்களை குடிமைப் பணி தேர்வுகளை எழுதுவதற்குப் பயிற்றுவிக்க முன்-தேர்வு பயிற்சி மையம் 1966-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது, 1971-ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் வழிகாட்டுதலுக்காக சிறப்புப் பயிற்சி மையம் ஒன்று நிறுவப்பட்டது. பின்னர் இந்த இரண்டு நிறுவனங்களும் 'அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் என்ற பெயரில் ஒன்றிணைக்கப்பட்டன.

மாணவர்கள் தங்களுடைய குறிக்கோளினை அடைவதற்கு உரிய படிக்கும் வசதியை மேற்கொள்ள இந்த மையம் அமைதியான சூழலில் அமைந்துள்ளது. போதிய வகுப்பறைகள், உள்ளரங்கம், நூலகம், விடுதி, உணவகம் ஆகிய அனைத்து வசதிகளையும்

கொண்டுள்ளதால் அனைவராலும் போற்றப்படுகின்ற கல்லூரியாக இது விளங்குகின்றது. அறிஞர் பெருமக்களும், அரசு உயர் அதிகாரிகளும் வகுப்பெடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இளைஞர்கள் தம்முடைய போட்டித் தேர்வுகளை திறமையாக எதிர்கொள்ள, தொடர்ந்து மாதிரித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

**<u>முதல்நிலைத் தேர்வுக்கான பயிற்சி</u>**

அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் முதல்நிலைத் தேர்வுக்குப் பயிற்சி அளிப்பதற்காக தகுதி வாய்ந்த 325 மாணவர்களை (225 நபர்கள் தங்கும் வசதியுடன், 100 மாணவர்கள் தங்கும் வசதி இல்லாமல்) நுழைவுத் தேர்வின் மூலம் தேர்வு செய்கிறது. நுழைவுத் தேர்விற்கான விளம்பரம் தமிழ் மற்றும் ஆங்கிலச் செய்தித்தாள்களிலும், மையத்தின் இணையதளத்திலும் www.civilservicecoaching.com நவம்பர் / டிசம்பர் மாதத்தில் வெளியிடப்படும். நுழைவுத் தேர்வில் பெறப்படும் மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுவர். மனித வள மேலாண்மைத் துறையின் 11.1.2022 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.4-இல் ஆணையிடப்பட்டவாறு இக்கல்லூரியில் சேருவதற்கான வழிமுறைகள் பின்பற்றப்படுகிறது.

**முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி**

ஒவ்வோர் ஆண்டும் முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெறும் 225 மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வினை எதிர்கொள்வதற்கான மூன்று மாதப் பயிற்சி வழங்கப்படுகிறது. அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையத்தில் பயின்று முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்றோர் மட்டும் இல்லாமல், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்து வரும் மாணவர்களும் இந்த முதன்மைத் தேர்வுப் பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். வருமான உச்சவரம்பைக் கருத்தில் கொள்ளாமல் அனைத்து 225 மாணவர்களுக்கும் பயிற்சி புத்தகங்களை பயன்படுத்திக் கொள்வதற்காக மாதமொன்றிற்கு ரூ.3,000/- என்ற அளவில் மூன்று மாதங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**மாதிரி ஆளுமைத் தேர்வு**

அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்காக மாதிரி ஆளுமைத் தேர்வை நடத்துகிறது. புது தில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வினை மாணவர்கள்

மனஉறுதியுடன் எதிர்கொள்வதற்காக, பணியிலிருக்கும் மற்றும் ஓய்வு பெற்ற அகில இந்திய குடிமைப் பணி அதிகாரிகளைக் கொண்டு மாதிரி ஆளுமைத் தேர்வு மற்றும் மாதிரி நேர்முகத் தேர்வும் நடத்தப்படுகிறது. ஆளுமைத் தேர்வுக்காக புது தில்லி செல்லும் மாணவர்களுக்கு தமிழக அரசு நாளொன்றுக்கு நூறு ரூபாய் என்ற அளவில் பத்து நாட்களுக்கு சலுகை விலையில் தங்கும் அறைகளையும், உணவினையும் தமிழ்நாடு இல்லத்தில் வழங்குகிறது. இடைநிகழ்வுச் செலவிற்கென வழங்கப்பட்ட ரூ.2,000/- மனித வள மேலாண்மை (பயிற்சி 1) துறையின் 8.7.2022 நாளிட்ட அரசாணை எண் 68 மூலம் ரூ.5,000/- ஆக உயர்த்தப்பட்டது.

இந்த மையத்தை முதல்வர் ஒருவரும், முழுநேர பேராசிரியர் ஒருவரும் நிருவகிக்கின்றனர். 23-க்கும் மேற்பட்ட தலைப்புகளில் பயிற்சி அளிப்பதற்காக 20 கௌரவப் பேராசிரியர்களும் பணி புரிகின்றனர்.

**<u>மதுரை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி மையங்கள்</u>**

கிராமப்புறங்களிலிருந்து இந்திய ஆட்சிப்பணி மற்றும் இந்திய காவல் பணி ஆகியவற்றிற்கான தேர்வுகளை

எழுதும் மாணவர்கள் பயனடையும் வகையில், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்திலும் அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி நிலையம் என்ற பெயரில் இரண்டு பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு குடிமைப் பணிகளின் முதல்நிலைத் தேர்வுகளுக்கு மட்டும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

**9(7) போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள்**

ஒன்றியப் பணியாளர் தேர்வாணையம், ரயில்வே தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வுக்குழுமம் , தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் போன்ற முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளை திறம்பட எதிர்கொண்டு வெற்றிகாண போட்டித் தேர்வுபயிற்சி மையங்கள் வழிவகை செய்கின்றன. இம்மையங்கள் சென்னையில் இரண்டும், கோவை, மதுரை, சேலத்தில் தலா ஒன்று செயல்பட்டு வருகின்றன.

9(8) தலைமைச் **செயலகப் பயிற்சி நிலையம்**

தலைமைச் செயலகப் பயற்சி நிலையம், மனித வள மேலாண்மைத் துறையின் கீழ் இயங்குகின்றது.

பொது நிருவாகம் மற்றும் நிதி மேலாண்மை நடைமுறைகள் போன்ற பாடத்திட்டங்கள் இப்பயிற்சி

**நிலையத்தில் நேரடி நியமனம் வாயிலாக தலைமைச் செயலகத் துறைகளில் பணியமர்த்தப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்களுக்கு அடிப்படைப் பயிற்சி வழங்கிவருகிறது.**

**10. புதிய முயற்சிகள்**

10(1) <u>விதிகள் ஆய்வுக் குழு</u>

தொடர்ந்து மாறிவரும் பணித் தேவைகள் மற்றும் பணிகளுக்கான கல்வித் தகுதிகளைக் கருத்தில் கொண்டு, பணியாளர் தெரிவு மற்றும் பதவி உயர்வுக்கான தகுதிகள் மறுவரையறை செய்யப்பட வேண்டும். எனவே, நேரடி நியமனங்களில் பணியாளர் தெரிவுக்கு பரிந்துரைக்கப்பட்ட தகுதிகளை நவீனமயமாக்குவது தொடர்பாக, சிறப்பு விதிகளை சீரமைக்கவும், புதுப்பிக்கவும் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களைக் கொண்ட குழு தனியே அமைக்கப்பட்டுள்ளது. அவ்விதி சார்ந்த துறைகளின் ஆலோசனையுடன் விதிகளை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

10(2) மின்னணு அலுவலக (e-Office System) முறை

வெளிப்படைத்தன்மை, துரிதமான செயல்பாடு ஆகியவற்றினை ஊக்குவிக்கும் வகையில். மின்னணு ஆளுகை மூலம் அரசு நிருவாகத்தினை திறம்பட கண்காணிக்கும் வகையில் மின்னணு - அலுவலக (e-Office) முறை அறிமுகப்படுத்தப்பட்டு 21.03.2022 முதல் இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

10(3) பயிற்சி அலகு

பொது நிர்வாகம், தலைமைச் செயலக நிர்வாகம், பணி சார்ந்த (சட்டம் / விதிகள்) நிர்வாகம், நேர்மையான நிர்வாகம் / ஒழுக்கம் / நடத்தை ஆகியவற்றில் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக இத்துறையில் ஒரு பயிற்சி அலகு உருவாக்கப்பட்டுள்ளது.

10(4) அடிப்படை விதிகள் ஆய்வுக் குழு

அரசின் அடிப்படை விதிகளில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்களை மேம்படுத்துவதற்காக அடிப்படை விதிகள் ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அப்பணி நிறைவுற்றவுடன், அரசுப் பணியாளர் நடத்தை

விதிகள், அரசு அலுவல் விதிகள், தலைமைச் செயலக அலுவலக நடைமுறை நூல் ஆகியவையும் மேம்படுத்தப்படும்.

## 10(5) IFHRMS குழு

வளர்ந்துவரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப, அரசுப் பணியாளர்களின் பணி நடைமுறைகள் யாவும் இணைய வழியே பராமரிப்பதற்கு ஏதுவாக தனியே IFHRMS குழு ஒன்று இத்துறையில் அமைக்கப்பட்டுள்ளது.

## 10(6) கருணை அடிப்படையிலான பணி நியமனத் திட்டம்

பணியிடை மரணமடைந்த அரசுப் பணியாளரின் குடும்பத்திலுள்ள வாரிசுதாரருக்கு உடனடியாக வேலைவாய்ப்பு உதவி அளிப்பதற்காக கொண்டுவரப்பட்ட திட்டம் இதுவாகும். கருணை அடிப்படையிலான பணிநியமனங்களை நிருவகிக்கும் பொருட்டு, "தமிழ்நாடு குடிமைப்பணிகள் (கருணை அடிப்படையிலான நியமனங்கள்) விதிகள் 2023" தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால் அரசாணை (நிலை)

எண்.33, நாள்08.03.2023-ல் வெளியிடப்பட்டுள்ளது. இப்பொருண்மை அரசாணை (நிலை) எண்.137, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள் 14.08.2023-இன் வாயிலாக இத்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**11. முடிவுரை**

அரசுப் பணியிலுள்ள பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் மனித வளத்தை மேம்படுத்தி பொது மக்களுக்கு சிறந்த சேவையை நல்கி ஒளிவு மறைவற்ற நிருவாகத்தை மேற்கொள்வதற்காக கொள்கைகளை வகுத்து தொடர்ந்து இத்துறை செயல்படுத்திவரும்.

**திரு. தங்கம் தென்னரசு,**
நிதி மற்றும் மனித வள
மேலாண்மைத் துறை அமைச்சர்.